

# வாரந்தோறும் ஒரு தீபம்!

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!**
**(சங்கீதம் 119:105)**

**(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)**

**வியாழன்தோறும்**

| 18.09.2025 | 38. வெளியே அல்ல, 'உள்ளத்தின் பாவங்களுக்கே' கண்ணீர் வடித்தேன்! |
|---|---|




**அ**க்காலங்களில் என் ஜீவியத்தின் 'தடுமாற்றம்' அடைந்த நேரங்களில் தேவனிடம் கூக்குரலிட்டு ஜெபித்தேன்:

''என் பிரிய தேவனே, நான் உமக்கு திரும்பத் திரும்ப வேதனை அளிக்கிறேனே! ஓ என் தேவனே, நான் தான் என் முழு இருதயத்தை உமக்கே கொடுத்துவிட்டேனே! அப்படியிருக்க, நீர் ஏன் என் இருதயத்தை உமக்கென்று முழுவதுமாய் எடுத்துக் கொள்ளக்கூடாது. அந்த இருதயத்தில் மீண்டும் களங்கம் ஏற்படுவது ஏன்? அந்த இருதயத்தை வழுவாமல் காத்துக்கொள்ள உமது கரத்திற்கு அதிக பெலன் உண்டல்லவா? நான் உம்மிடம் ஒப்படைத்த இருதயத்தை மீண்டும் எனக்கே தருவது ஏன்?.... ஆம், புரிந்து கொண்டேன், என் மீறுதலின் நேரத்தில் என்னைத் தாங்கிடும் உமது கிருபையின் தயவை நான் ருசிக்க வேண்டும் என்ற உமது ஞானத்தை புரிந்துகொண்டேன்!''என நான் மனம் விட்டு தேவனிடம் அறிக்கை செய்தேன். என் சிறு சிறு மீறுதல்களிலும் என் கண்ணீரின் ஜெபத்தை நான் ஏறெடுத்தபடியால்..... நானே அறியாத விதத்தில் பெரிய மாற்றங்கள் எனக்குள் வளரத் தொடங்கியது. ஒன்று நான் கூறுவேன், என் மனதார விரும்பி சிறு தவறு கூட அன்றும் இன்றும் செய்ததில்லை. அனைத்தும் என் உள்ளத்திலிருந்து தோன்றிய பாவங்களேயாகும்! அந்த பாவங்களே, தேவனிடம் என்னை உந்தித் தள்ளி, கண்ணீரின் ஜெபத்தில், முழு வெற்றி காணச் செய்தது!

*– (மேடம் குயான் வாழ்க்கை தீபங்கள்)*